துணை ஆணையர் (மா.வ), சரகம்-2, சென்னை-6 அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை- திருமதி.க.நப்பின்னை,
5வது தளம், எண்.32, யானைக்கவுனி பாலம் சாலை, சென்னை-3.

ந.க.549/2019/அ6 நாள். 02.01.2020

| | |
|---|---|
| நகல் | பொதுப்பணிகள் - வணிக வரித்துறை - சென்னை (வடக்கு) கோட்டம் - துணை ஆணையர் (மா.வ) சரகம் - 2, சென்னை - 6 - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV - 2017 - 2018 மூலம் நியமனம் செய்யப்பட்டு - பணியில் சேர்ந்த இளநிலை உதவியாளர்களின் பதவியிடத்தில் பணி வரன்முறை செய்தல் - ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக. |
| பார்வை | 1. செயலாளர் / தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை- 3 க.எண் 1327/PSD – G1/2019 நாள். 18.02.2019. |
| | 2.இணை ஆணையர் (மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை - 6 அவர்களின் செயல்முறை ந.க. எண். 1612/ 2017/அ2, நாள். 25.02.2019 |
| | 3. இணை ஆணையர் (மா. வ), சென்னை (வடக்கு) கோட்டம், சென்னை - 6 அவர்களின் செயல்முறை ந.க. 1011/2019/அ1, நாள் - 07.03.2019. |

ஆணை-

பார்வை 1-ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2017-18-ம் ஆண்டு தொகுதி IV அடங்கிய தேர்வின் மூலம் கீழ்கண்ட இளநிலை உதவியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பார்வை -3- ல் காணும் இணை ஆணையர் (மா.வ), சென்னை (வடக்கு) கோட்டம், அவர்களின் செயல்முறை ஆணையின்படி பணிநியமனம் செய்யப்பட்டனர்.

| வ.எண் | பெயர் / பதவி திருவாளர்கள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (2) | (3) | (4) |
| 1. | ப.அனுசுயா | துணை ஆணையர் (மா.வ), அலுவலகம், சரகம்-2, சென்னை-3 | 12.03.2019 மு.ப. | 12.03.2019 மு.ப. |
| 2. | ரா.ராம்குமார் | உதவி ஆணையர் (மா.வ), அலுவலகம், வண்ணாரப்பேட்டை வரிவிதிப்பு வட்டம் | 13.03.2019 மு.ப. | 13.03.2019 மு.ப. |
| 3. | த.நக்கீரன் | உதவி ஆணையர் (மா.வ), அலுவலகம், இராயபுரம் வரிவிதிப்பு வட்டம் | 13.03.2019 மு.ப. | 13.03.2019 மு.ப. |
| 4. | க.விஷ்ணுவர்த்தன் | உதவி ஆணையர் (மா.வ), அலுவலகம், மண்ணடி வரிவிதிப்பு வட்டம் | 13.03.2019 மு.ப. | 13.03.2019 மு.ப. |
| 5. | இரா.மஞ்சு | உதவி ஆணையர் (மா.வ), அலுவலகம், பெத்துநாயக்கன்பேட்டை வரிவிதிப்பு வட்டம் | 20.03.2019 மு.ப. | 20.03.2019 மு.ப. |

(2) மேற்படி தனியாளர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்ய தமிழ்நாடு அமைச்சு பணியாளர்கள் விதி 32(அ)(1) -ன்படி ஆணை வழங்கப்படுகிறது.

(3)மேற்கண்ட இளநிலை உதவியாளர்கள் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணிக் காலத்தில் ஈராண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(4) தகுதிகாண் பருவக் காலத்தில் மேற்படி தனியாளர்கள் கீழே குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

1. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறைகள்
2. துறைத் தேர்வுகள் - வணிகவரிச் சட்டம் பாகம் I,II,III
3. அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி.

(5) இப்பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதிமன்ற சென்னை மற்றும் மதுரை கிளைகளில் பணிநியமன ஆணைகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது.

(6) மேற்கண்ட தனியாளர்கள், பணிவரன்முறை ஆணையினைத் தொடர்ந்து, இரண்டாவது மற்றும் அதற்கு பிறகுமுள்ள வருடாந்திர ஊதிய உயர்வினை, தகுதிகாண் பருவம் முடித்தபிறகு பெற தகுதியுடையவர்களாவர்.

(7) மேற்படி தனியாளர்களுக்கு பணி வரன்முறை செய்யப்பட்டதை தொடர்ந்து, இளநிலை உதவியாளர்கள் பணிநிலையில் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

ஓம்/- கி.நப்பின்னை,
துணை ஆணையர் (மா.வ)(முகூபொ),
சரகம்-2, சென்னை-3.

**பெறுநர்**
இளநிலை உதவியாளர்கள்.
சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் (மா.வ), அலுவலகம் மூலமாக

**நகல் - தகவலுக்காக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை - 6.
2. இணை ஆணையர் (மா.வ), சென்னை (வடக்கு) கோட்டம், சென்னை - 6.
3. இணை ஆணையர் (மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை - 6

//உண்மை நகல்//

Sudhar 10/1/2020
மேலாளர்/மாநிலவரி அலுவலர்

6/1/2020

Original copy received by,
T. Nithi
24/01/2020